Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 112 | உள்ளூர் - 22.04.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 112 | வெளியூர் - 23.04.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

சனிப் பெயர்ச்சி! பாதிப்பில் இருந்து தப்பிக்கும் ரகசிய வழிமுறை!

கொட்டிக்கிடக்கும் வேலை வாய்ப்புகள்!

மதுரை மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கில் தமிழ்!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## அமெரிக்கா - ஈரான் போர் நிறுத்தம் நீட்டிப்பு: ட்ரம்ப்!

வாஷிங்டன். ஏப். 22–

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இரண்டு வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்த போர் நிறுத்தம் (ஏப்.22) நிறைவடைகிறது. இந்த சூழலில் ட்ரம்ப் இதனை நீட்டித்துள்ளார்.

இது தொடர்பாக ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். “ஈரான் உடனான போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுகிறது. அமைதி ஒப்பந்தம் சார்ந்து ஒருங்கிணைந்த முன்மொழிவை ஈரான் முன்வைக்கும் வரையில் இந்த போர் நிறுத்தம் தொடரும். அதே நேரத்தில் ஈரான் துறைமுகங்கள் முற்றுகையிட்டுள்ள அமெரிக்க ராணுவத்தின் பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நான் கூறியுள்ளேன்,” என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## பயங்கரவாதத்திற்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது; பிரதமர் மோடி!

டெல்லி, ஏப். 22–

ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசம் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி பயங்கரவாத தாக்குதல் நடைபெற்றது. பஹல்காமின் பைசாரன் பள்ளத்தாக்கில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த பயங்கரவாத தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர்.



பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பினர் இந்த தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் மூலம் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது.

இந்நிலையில், பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் நடைபெற்று ஓராண்டு நிறைவடைந்த நிலையில் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், பஹல்காமில் கடந்த ஆண்டு இதேநாளில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவில் கொள்கிறேன். அவர்கள் ஒருபோதும் மறக்கப்படமாட்டார்கள். தாக்குதலில் உயிரிழந்தவர்களின் நினைவில் வாழும் குடும்பத்தினருடன் நான் துணை நிற்கிறேன். இந்த துக்கத்தில் நாடு ஒன்றாக நிற்கிறது.பயங்கரவாதத்திற்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது. பயங்கரவாதம் ஒருபோதும் வெற்றிபெறாது

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்

# 234 தொகுதிகள்- 5.73 கோடி வாக்காளர்கள்

# 4,023 வேட்பாளர்கள் போட்டி

### பதற்றமானவை 5,949 வாக்குச்சாவடிகள்!!






சென்னை, ஏப். 22–

தமிழ்நாட்டின் 234 தொகுதிகளுக்கும் நாளை ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

* தமிழகம் முழுவதும் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் நட்சத்திர வேட்பாளர்கள், சுயேட்சைகள் என 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

* தமிழ்நாட்டில் 5.73 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

* தமிழ்நாட்டில் 2.77 கோடி ஆண் வாக்காளர்கள், 2.89 கோடி பெண் வாக்காளர்கள் உட்பட 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி யானவர்கள்.

* 14.59 லட்சம் பேர் முதல்முறையாக வாக்களிக்க உள்ளனர்.

* வாக்குப்பதிவு மையங்களுக்கள் மொபைல் எடுத்து செல்ல முடியாது.

* தமிழ்நாடு முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு முழுவதும் 5,949 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

* தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடி மையங்களில் சிசிடிவி கேமரா அமைத்து கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் இதுவரை 4.18 லட்சம் தபால் வாக்குகள் பதிவாகி உள்ளது.

* 4 கட்டுப்பாட்டு மையங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன.

* தேர்தலில் பதிவாகும் வாக்குகளை எண்ண 65 வாக்கு எண்ணிக்கை மையங்கள் தயார்.

* பிரச்சனைக்குரியதாக கண்டறியப்பட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

* காவல்துறையினர் மட்டுமின்றி 300 கம்பெனி துணை ராணுவப்படையினரும் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

* தமிழகம் முழுவதும் ரூ.1,262 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி நகைகள், மதுபானம், பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

## ஏப்ரல் 23 உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள்! - முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஏப். 22–

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை மறுநாள் (ஏப்ரல் 23) நடைபெற உள்ளது. சட்டமன்ற தேர்தலுக்கான பிரசாரம் இன்று மாலையுடன் ஓய்ந்தது. இந்த நிலையில் ஏப்ரல் 23 – தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள்



என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டு, வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் அவர் தெரிவித்திருப்பதாவது:–

என்னுயிர் மக்களே! நம் தமிழ்நாட்டோட எதிர்காலத்தை நீங்கள் எழுதப் போற நாள். உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது. உங்களுக்கு தெரியும். எது உண்மை, எது பொய். எது நடிப்பு, எது உழைப்பு. யார் நரி, யார் சிங்கம். அடிமைத்தனம் எது, தைரியம் எது. எல்லாமே உங்களுக்கு நல்லாவே தெரியும். இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருத்த ருக்கும் ஒரு கடமை இருக்கு. என்னை நம்பி இந்த நாட்டை என்னிடம் கொடுத்தீர்கள். 5 வருஷத்தில் எத்தனையோ துறைகளில் தமிழ்நாட்டை முதலிடத்துக்கு நாம் ஒன்றாக கொண்டு வந்திருக்கிறோம்.

நாம் வீழ்த்தின எதிரிகளின் சதிகளை எண்ண ஆரம்பித்தால், அதற்குள் தேர்தல் முடிவே வந்து விடும். நம் திட்டங்களை, அதனால் விளைந்த நன்மைகளை பட்டியலிட ஆரம்பித்தால் அடுத்த தேர்தலே வந்து விடும். எனக்கு நீங்கள் கொடுத்த கடமையை என்னால் முடிந்த வரைக்கும் சரிவர செய்து விட்டேன். உங்களுடைய கடமை அதை நீங்களும் சரி வர செய்ய வேண்டும்.

அடுத்த 5 வருஷத்துக்கு இதுவரைக்கும் யாரும் காணாத ஒரு பெரிய கனவோடு காத்திருக்கிறேன். இனி நம் போட்டி டெல்லியோடு மட்டும் இருக்காது. தெற்காசியாவில் எல்லா துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றி காட்டுவேன். மண், மொழி, மானம் மூன்றையும் காப்பாற்ற மூச்சிருக்கும் வரை போராடுவேன். வாக்களிப்பீர் உதயசூரியன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களின் சின்னங்களுக்கு. தமிழ்நாடு வாக்களிக்கும்! தமிழ்நாடு வெல்லும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தமிழகம் முழுவதும் கோடிக்கணக்கில் பணம் பறிமுதல்!

சென்னை, ஏப். 22–

தமிழகம் முழுவதும் பறக்கும் படை சோதனையை தாண்டி கடந்த 3 நாட்களாகவே வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா தீவிரமாக நடைபெற்று உள்ளது. இன்று காலையிலும் பல இடங்களில் சர்வசாதாரணமாக பணப்பட்டுவாடா நடைபெற்றதை காண முடிந்தது.

அந்த வகையில் சென்னை மந்தைவெளியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து பல கோடி ரூபாய் மதிப்பிலான 500 ரூபாய் நோட்டு கட்டுகளையும், வாக்காளர்களுக்கும், கூட்டணி கட்சியினர்களுக்கும் பணம் வினியோகம் செய்ததற்கான ஆவணங்களையும் தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

மந்தவெளிப்பாக்கம் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் இன்று காலையில் தேர்தல் பறக்கும் படையினர், துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் சோதனை செய்தபோது, வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதற்கான ரூபாய் நோட்டுகள் இருந்ததை தேர்தல் பறக்கும் படையினர் கண்டறிந்தனர். இதில் முதற்கட்டமாக கூட்டணி கட்சிகளுக்கு பணம் விநியோகித்ததற்கான ஆதாரங்களையும், மந்தவெளி பகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு பணம் விநியோகம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களையும் கைப்பற்றினர்.

வீட்டின் வேறு பகுதிகளில் பணம் பதுக்கி வைக்கப்பட்டு உள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்தனர். இதில் வீட்டின் சமையல் அறையில் இருந்து கட்டு கட்டாக 500 ரூபாய் நோட்டுகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து வீட்டின் படுக்கை அறை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியதில் பல கோடி ரூபாய் மதிப்பிலான 500 ரூபாய் நோட்டுகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

அதோடு மந்தவெளி பகுதி நிர்வாகிகளுக்கு பணம் கொடுப்பதற்கான உரைகள், பணம் எண்ணும் எந்திரம் ஆகியவற்றையும் தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களிலும் கோடிக்கணக்கில் பணம் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. அதன் விவரம் வருமாறு:–

நெல்லை மாவட்டத்தில் பறக்கும்படை நடத்திய சோதனையில் ரூ.73 லட்சத்து 44 ஆயிரத்து 510 சிக்கியுள்ளது. நெல்லை தொகுதியில் அதிகபட்சமாக சுமார் ரூ.25 லட்சத்து 78 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

போலீசாரின் சோதனையில் ரூ.48 ஆயிரத்து 500–ம், வருமான வரித்துறையினர் மூலமாக நெல்லை மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத ரூ.1 கோடியே 41 லட்சத்து 12 ஆயிரமும் மாவட்டம் முழுவதும் ரூ.10 லட்சத்து 68 ஆயிரத்து 812 மதிப்பிலான பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

நேற்று இரவு வரை நெல்லை மாவட்டத்தில் ரூ.4 கோடியே 39 லட்சத்து 77 ஆயிரத்து 337 பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் செல்லத்துரை அலுவலகத்தில் கட்டுக்கட்டாக பணம் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தேர்தல் அதிகாரிகளுக்கு புகார் வந்தது. அதன்பேரில் அங்கு பறக்கும்படை அதிகாரிகள் நடத்திய சோதனையில் சாக்குமூட்டையில் கட்டுக் கட்டாக இருந்த ரூ.44½ லட்சம் பறிமுதல் செய்யப் பட்டிருந்தது.

இந்த பணம் வாக்காளர்களுக்கு கொடுக்க பதுக்கப்பட்டிருந்ததா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தொகுதியில் போட்டியிடும் அ.ம.மு.க. வேட்பாளர் சுந்தர்ராஜ் வீட்டில் ஏராளமான பணம் பதுக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நேற்று அவரது வீட்டில் பறக்கும்படையினர் 7 மணி நேரம் சோதனை நடத்தினர். அப்போது வீட்டில் இருந்து ரூ.27 லட்சத்து 65 ஆயிரம் மற்றும் வீட்டின் பின்புறம் உள்ள தோட்டப் பகுதியில் பைகளில் இருந்த சுமார் ரூ.20 லட்சம் என மொத்தம் ரூ.48 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் கடந்த மாதம் (மார்ச்) 15–ந்தேதி முதல் நேற்று வரை நடத்திய சோதனையில் மொத்தம் ரூ.1கோடியே 17 லட்சத்து 71 ஆயிரத்து 560 பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி சட்டசபை தொகுதியில் ரூ.20,33,920, நாகர்கோவில் தொகுதியில் ரூ.18,99,340,குளச்சல் தொகுதியில் ரூ.22,32,250, பத்மநாபபுரம் தொகுதியில் ரூ.6,42,700, விளவங்கோடு தொகுதியில் ரூ.32,33,560, கிள்ளியூர் தொகுதியில் ரூ.17,29,790 பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.



திருச்சி மாவட்டத்தில் நேற்று வரை ரூ.1 கோடியே 57 லட்சம் ரொக்கப் பணம் மற்றும் ரூ.52 லட்சம் மதிப்பிலான பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ரொக்க பணத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களை அதிகாரிகளிடம் வழங்கி ரூ.1 கோடிக்கு மேல் பணத்தை திரும்ப பெற்றுச் சென்றுள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், குளித்தலை, கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுக்கள் மூலம் நேற்று வரை ரூ.1 கோடியே 6 லட்சத்து 1,671 பணமும், 3,240 துண்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி தொகுதி மணப்பாக்கத்தில் வாக்காளர்களுக்கு வினியோகம் செய்ய அவர்கள் கொண்டு சென்ற ரூ.5.34 லட்சம் ரொக்கம் மற்றும் டோக்கன்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 8 தொகுதிகளையும் சேர்த்து ரூ.2 கோடியே 99 ஆயிரத்து 870 ரூபாயை பறிமுதல் செய்துள்ளனர்.

880 லிட்டர் அளவு மதுபானங்களை பறிமுதல் செய்துள்ளனர். இதன் மதிப்பு ரூ. 5 லட்சமாகும். விலை உயர்ந்த மற்றும் சாதாரணமான போதை பொருட்கள் 308 கிலோ பறிமுதல் செய்துள்ளனர். இதன் மதிப்பு ரூ.6 கோடியே 8 லட்சத்து 89 ஆயிரத்து 425 ரூபாய் ஆகும்.

ஒசூர் அருகே வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அட்டகுறிக்கி என்ற கிராமத்தில் அ.தி.மு.க. பிரமுகர் பசவராஜ் வீட்டில் 6 மணி நேரத்திற்கு மேலாக நடத்திய சோதனையில் அவரது வீட்டில் இருந்து ரூ.58 லட்சம் பணத்தை வருமான வரித்துறை அதிகாரிகள் கைப்பற்றியதாக கூறப்படுகிறது.

அந்த பணத்திற்கான ஆவணங்கள் சமர்பிக்கப்படாத நிலையில் வருமான வரித்துறையினர் நேரில் ஆஜராக நோட்டீஸ் வழங்கியுள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை ரூ.1 கோடியே 17 லட்சத்து 75 ஆயிரத்து 127 அளவிலான ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. மேலும் தங்க நகைகள், சில்வர் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.1 கோடியே 57லட்சத்து 30 ஆயிரத்து 201 பறிமுதல் செய்யப்பட்டு, பின்னர் ஆவணங்கள் சமர்ப்பித்ததன் அடிப்படையில், ரூ.1 கோடியே 55 லட்சத்து 63ஆயிரத்து 661 உரியவர்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளது. வருமான வரித்துறை மூலம் ரூ.40 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் சட்ட விதிமுறைகளை மீறி கொண்டு செல்லப்பட்ட ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள மதுபான பாட்டில்களும், ரூ.78 ஆயிரத்து 522 மதிப்பிலான போதைப்பொருட்களும் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.36.17 கோடி மதிப்பிலான ரொக்கம், தங்கம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

விதிமீறல் தொடர்பாக இதுவரை கோவை மாநகர போலீசாரால் 112 வழக்குகள், மாவட்ட போலீசாரால் 356 வழக்குகள், பறக்கும் படைகளால் 69 வழக்குகள் என மொத்தம் 537 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு வந்த 712 புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் போடி பகுதியில் உள்ள வீட்டில் உரிய ஆவணங்கள் இன்றி ரூ.15 லட்சம் இருந்தது. அதனை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். திண்டுக்கல் பாலகிருஷ்ணாபுரம் பகுதியில் பறக்கும்படையினர் இன்று ரூ.2.50 லட்சம் பணத்தை பறிமுதல் செய்தனர். மேலும் 3 இடங்களில் ரூ.6 லட்சத்து 34 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டது. மாவட்டம் முழுவதும் ரூ.8 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்

மதுரை மணி

புதன்கிழமை 22.04.2026

விசுவாவசு தமிழ் வருடம்

சித்திரை மாதம் 09-ம் தேதி

## தங்கத்தை தூக்கி சாப்பிட்ட வெள்ளி..!!




இந்தியாவில் அதிக அளவு தங்கத்திற்கான டிமாண்ட் இருக்கக்கூடிய ஒரு காலமாக அட்சய திருதியை பண்டிகை காலம் பார்க்கப்படுகிறது. அட்சய திருதியை என மட்டும் இல்ல எப்போதுமே தங்கம், வெள்ளி ஆகிய இரண்டிலும் செய்யக்கூடிய முதலீடுகள் நமக்கு லாபமாக தான் இருக்கின்றன. அந்த வகையில் கடந்த ஆண்டு அட்சய திருதியை பண்டிகைக்கு தங்கம் மற்றும் வெள்ளியில் முதலீடு செய்தவர்கள் எல்லாம் இந்த ஆண்டு ராஜாவாக மாறி இருக்கிறார்கள். இந்த ஓராண்டு காலத்தில் தங்கம் மற்றும் வெள்ளி ஆகி இரண்டுமே முதலீட்டாளர்களுக்கு பெரிய அளவில் லாபம் தந்திருக்கிறது. கடந்த ஆண்டு அட்சய திருதியை பண்டிகை ஏப்ரல் 30ஆம் தேதி கொண்டாடப்பட்டது. அப்போது இந்தியாவில் 24 கேரட் தங்கம் 10 கிராமின் விலை 97,910 ரூபாய் அதுவே இன்று 24 கேரட் தங்கம் 10 கிராமின் விலை 1,55,000 ரூபாய். அதாவது கடந்த ஆண்டு 24 கேரட் தங்கம் 10 கிராம் வாங்கியவர்களுக்கு இந்த ஆண்டு அதன் மதிப்பில் 58.7 சதவீத லாபம் கிடைத்திருக்கிறது.

தங்கம் விலை தன்னுடைய வரலாற்று உச்சபட்ச விலையில் இருந்து தற்போது சரிவடைந்திருக்கும் போதிலும் இந்த ஓராண்டு கால வித்தியாசத்தை பார்க்கும் போது பார்க்கும் போதே 59 சதவீத லாபம் தந்திருக்கிறது. அது மட்டுமல்ல வெள்ளியின் விலை இன்னும் தாறுமாறாக உயர்ந்து முதலீட்டாளர்களை உச்சானி கொம்பில் அமர வைத்திருக்கிறது. கடந்த ஆண்டு அட்சய திருதியைக்கு ஒரு கிலோ வெள்ளியின் விலை 1 லட்சம் ரூபாய் அதுவே இந்த ஆண்டு 2.7 லட்சம் ரூபாய் அதாவது 170 சதவீதம் வெள்ளியின் விலை உயர்ந்திருக்கிறது. கிட்டதட்ட இந்த ஓராண்டு காலத்தில் தங்கம் மற்றும் வெள்ளி ஆகிய இரண்டுமே பெருமளவு மாற்றம் கண்டுவிட்டன.

குறிப்பாக கடந்தாண்டு இறுதியிலிருந்து இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரை தங்கம், வெள்ளி ஆகிய இரண்டுமே போட்டி போட்டுக் கொண்டு விலை உயர்ந்தன. தற்போது ஈரான் போர் காரணமாக தான் கடந்த இரண்டு மாதங்களாக இந்த இரண்டு பொருட்களின் விலையுமே சரிந்திருக்கின்றன. இல்லை என்றால் இன்னும் கூட விலை உயர்ந்திருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

தற்போது வரலாற்று உச்சபட்சத்தில் இருந்து தங்கம் வெள்ளி ஆகிய இரண்டுமே விலை குறைந்து தான் இருக்கின்றன. தங்கம் விலை ஒரு சவரன் இனி ஒரு லட்சம் ரூபாய்க்கு கீழ் செல்வதற்கு வாய்ப்பு மிக மிக குறைவு . அது மட்டும் இல்லாமல் மே ஒன்றாம் தேதியிலிருந்து ரஷ்யாவின் தங்கை ஏற்றுமதி தடையும் நடைமுறைக்கு வருகிறது என்பதால் தங்கம் வாங்க வேண்டுமென என்பவர்கள் இந்த அட்சய திருதியை பண்டிகையில் தங்கத்தை வாங்கினால் அடுத்த ஆண்டுக்குள் ஒரு கணிசமான லாபத்தை பார்க்க முடியும் என்பதே நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது. தங்கத்தின் விலை அடுத்த சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் உயரத் தொடங்கும்,வெள்ளியின் விலை ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும் தங்கம், வெள்ளி வாங்குவதற்கான வாய்ப்பு எப்போது கிடைத்தாலும் அதனை பயன்படுத்து கொள்ள வேண்டும் ஏனெனில் நீண்ட கால போக்கில் அது பெரிய லாபமாகவும் சொத்தாகவும் மாறி நிற்கும்.




# வாக்குச்சாவடிக்கு செல்போன் கொண்டு போகலாமா? தேர்தல் ஆணையம் விளக்கம்!!

சென்னை, ஏப். 22–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் வாக்களிப்பதற்காக கோடிக்கணக்கான வாக்காளர்கள் உற்சாகத்துடன் காத்திருக்கின்றனர்.ஏப்ரல் 23ஆம் தேதி வியாழக்கிழமை தமிழ்நாட்டின் வரலாற்றை மாற்றியமைக்க கூடிய ஒரு நாளாக மாறப்போகிறது.




இத்தகைய சூழலில் வாக்களிக்க செல்பவர்களுக்கு பல்வேறு சந்தேகங்கள் நிலவுகின்றன. அதுவும் முதல் தலைமுறை வாக்காளர்களுக்கு நிலவும் முக்கியமான ஒரு சந்தேகம் வாக்களிக்க செல்லும் போது கையில் மொபைல் போனை கொண்டு செல்லலாமா வேண்டாமா என்பதுதான். தற்போது பலரும் செல்ஃபீ, ரீல்ஸ் மோகத்திற்கு அடிமையாகியுள்ளனர். இந்த சூழலில் தான் வாக்காளர்கள் வாக்கு சாவடிக்கு செல்லும் போது கையில் செல்போன் கொண்டு செல்லலாமா என்ற குழப்பம் எழுந்துள்ளது. ஆனால் செல்போனை வாக்குச்சாவடிக்குள் கொண்டு செல்ல அனுமதி கிடையாது என தேர்தல் ஆணையம் கூறிவிட்டது. தேர்தலில் வாக்களிக்கும் போது பலரும் செல்பி மற்றும் ரிலீஸ் எடுக்க முற்படுவார்கள் இது பல்வேறு பிரச்சனைகளுக்கு வித்திடும் என்பதால் தேர்தல் ஆணையம் வாக்குச்சாவடிக்குள் வாக்காளர்கள் செல்போன்களை கொண்டு செல்ல அனுமதி இல்லை என திட்டவட்டமாக தெரிவித்து இருக்கிறது.

வாக்காளர்கள் தங்களுடைய செல்போன்களை பாதுகாப்பாக ஒப்படைக்க தனி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியிருக்கிறது. அதாவது நீங்கள் வாக்கு சாவடிக்கு செல்லும்போது முன்கூட்டியே உங்களுடைய செல்போன் வாங்கி பாதுகாப்பாக வைக்கப்படும்.

நீங்கள் வாக்கு செலுத்திவிட்டு மீண்டும் வந்த பிறகும் உங்களுடைய செல்போனை பெற்றுக் கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மொபைல் ஃபோன்களை ஒப்படைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தரப்பில் கூறப்படுகிறது.

வாக்காளர்கள் மொபைல் போன்களை அங்கே ஒப்படைத்து வாக்களித்துவிட்டு பின்னர் திரும்ப வந்து பெற்றுக் கொண்டு செல்லலாம். இதற்காக டோக்கன் போன்ற வசதி முறை கொண்டு வரப்படுகிறதாம். இதனால் நம் போனும் பாதுகாப்பாக இருக்கும். அது மட்டும் இல்லாமல் இந்த முறை வாக்குப்பதிவு அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் கலர் புகைப்படமும், பெரிய பெரிய எழுத்துக்களில் அவர்களின் பெயர்களும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே வாக்காளர்கள் எளிதாக தங்களுடைய வேட்பாளரை அடையாளம் காண முடியும்.

தேர்தல் ஆணையம் 100% வாக்குப்பதிவை எட்டி விட வேண்டும் என்பதற்காக பல வசதிகளையும் செய்து வருகிறது. போட்டியும் கடுமையாகி இருப்பதால் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# சென்னை மக்களே அலர்ட்!! மெட்ரோவில் பயணம் செய்ய இந்த கார்டு இனி செல்லாது என அறிவிப்பு!!

சென்னை, ஏப். 22–

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயண அட்டை (Travel Card) பயன்பாட்டிலிருந்து முழுமையாக சிங்கார சென்னை அட்டைக்கு (தேசிய பொது போக்குவரத்து அட்டை) மாற்றம்




சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில்களில் பயணிக்க சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயண அட்டையுடன் கூடுதலாக 14.04.2023 முதல் “சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது போக்குவரத்து அட்டை)” அறிமுகப்படுத்தியது.

இந்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, இந்தியா முழுவதும் உள்ள பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் தடையற்ற பயணத்தை உறுதி செய்யும் வகையில், 01.05.2026 முதல் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் “சிங்கார சென்னை அட்டைக்கு (தேசிய பொது போக்குவரத்து அட்டை)” முழுமையாக மாற திட்டமிட்டுள்ளது. எனவே, மெட்ரோ இரயில்களில் பயணம் செய்யவும், மெட்ரோ வாகன நிறுத்தங்களை பயன்படுத்தவும், பயணிகள் தங்களது பழைய பயண அட்டையில் மீதமுள்ள தொகையை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மொபைல் செயலி (Mobile App) மூலம் பெறப்படும் QR Stored Value Pass (SVP) அல்லது தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகி றார்கள். அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பான, நம்பகமான பயண அனுபவத்தை வழங்க சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உறுதியுடன் உள்ளது. இதனால் ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம். உங்கள் மேலான ஆதரவைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

# பொய்யான தகவல்: செல்வப்பெருந்தகை மீது சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் புகார்!

சென்னை, ஏப். 22–

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தொடர்பாக வருமான வரி சோதனை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அவரின் அரசியல் செயல்பாடுகளுக்கு எந்த தடையையும் ஏற்படுத்தவில்லை, அவர் பொய்யாக வருமான வரித்துறை சோதனை, சிறைவைப்பு என தெரிவித்துள்ளார். அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வருமான வரித்துறைதெரிவித்துள்ளது.

தன்னிடம் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியதாக அவதூறு பரப்பிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை மீது வழக்குப்பதிவு செய்யுமாறு, வருமான வரித்துறை அதிகாரிகள், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளனர்.




# கொங்கு ஆர்ட்ஸ் கல்லூரியில் உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சி!

ஈரோடு, ஏப். 22–

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் நீங்களும் ஆகலாம் ஆடிட்டர்/அரசு அதிகாரி எனும் தலைப்பில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சி, கல்லூரியின் தாளாளர் பி.சச்சிதானந்தன் வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ஹ.வாசுதேவன் தலைமை உரையாற்றினார். நிகழ்வில் தென்னிந்திய பட்டய கணக்காளர் அமைப்பின் திருப்பூர் பிரிவின் தலைவர் K.C. செந்தில்குமார் C. அண்ணா அவர்கள் பேசினார்.




பட்டையக் கணக்கர் எம்.விஷ்ணுகுமார், முன்னாள் தலைவர் பட்டையக் கணக்கர் கே.சி.செந்தில்குமார், ஜிமேப் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் பங்குதாரர் பட்டயக் கணக்கர் பி.அருள்ஜோதி, சென்னை, ஜெ.கே.ஷா பட்டையக் கணக்கர் பயிற்சி நிறுவனத்தின் வர்த்தக வளர்ச்சிப் பிரிவு தலைவர் பட்டையக் கணக்கர் எல்லப்பராஜ், சிக்ஸா சுவாதிகா (யுபிஎஸ்சி பயிற்சி மையம்) நிறுவாக இயக்குனர் சுவாதிகா ஏ சேகர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டையக் கணக்கர் மற்றும் இந்திய ஆட்சித் துறை சார்ந்த உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு வழிகாட்டியதோடு அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். இந்நிகழ்விற்கு உள்தர உறுதிப்பாடு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கே.கே.ஏ.அழகப்பன் வரவேற்றார், வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் கே. எம்.குமரகுரு நன்றி கூறினார். இந்நிகழ்வில் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் திரளாக கலந்து கொண்டனர்.




பழனியில் கோட்டாட்சியர் கண்ணன் தலைமையில், 100% வாக்குப்பதிவு செயல்படுத்த உறுதிமொழி ஏற்று, விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.




பழனியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில், திருவாரூரில் நடைபெற உள்ள மாநில மாநாட்டையொட்டி ஆலோசனைக் கூட்டம். மாவட்ட தலைவர் ஜே பி சரவணன் தலைமையில் நடைபெற்றது. இதில் சரவண பொய்கை கந்த விலாஸ் என்.பாஸ்கர், கணபத் கிரேண்ட் அதிபர் என்.ஹரிஹரமுத்து, வள்ளுவர் தியேட்டர் செந்தில்குமார், ஜெகதீஸ், ராதாகிருஷ்ணன், ரம்யா கிருஷ்ணன், பங்கேற்றனர்.



# சனிப் பெயர்ச்சி எச்சரிக்கை! எந்தெந்த ராசிக்காரர்கள் பரிகாரம் செய்ய வேண்டும்? பாதிப்பில் இருந்து தப்பிக்கும் அந்த ரகசிய வழிமுறை!



ஜோதிட சாஸ்திரத்தில் சனி பகவான் என்றாலே பலருக்கும் ஒருவிதமான நடுக்கம் ஏற்படும். “சனி பிடிச்சிருக்கோ?” என்று கேட்பது கூட ஒரு வசையாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் உண்மையில் சனி பகவான் என்பவர் தீமை செய்பவர் அல்ல; அவர் ஒரு நீதிபதி போன்றவர். நாம் செய்த நல்வினை மற்றும் தீவினைகளுக்கு ஏற்பப் பலன்களைக் கொடுப்பவர். ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்குச் சனி பகவான் பெயர்ச்சி அடையும் போது, அந்தந்த ராசிக்காரர்களின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்கின்றன. இப்போது நடந்து கொண்டிருக்கும் சனிப் பெயர்ச்சி மற்றும் வரப்போகும் மாற்றங்களால் சில குறிப்பிட்ட ராசிக்காரர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம். ஏழரை சனி, அஷ்டம சனி அல்லது அர்த்தாஷ்டம சனி நடப்பவர்களுக்கு வாழ்வில் சில சோதனைகள் வரக்கூடும். ஆனால் அந்தச் சோதனைகளைக் கண்டு பயப்படாமல், முறையான பரிகாரங்களைச் செய்தால் சனியின் பிடியில் இருந்து தப்பிப்பதோடு மட்டுமல்லாமல், அவரது அருளையும் பெற முடியும்.

தற்போது கும்ப ராசியில் அமர்ந்து ஆட்சி செய்து வரும் சனி பகவானால், கும்பம், மகரம் மற்றும் மீன ராசிக்காரர்களுக்கு ஏழரை சனியின் தாக்கம் இருக்கிறது. அதேபோல் கடக ராசிக்கு அஷ்டம சனியும், விருச்சிக ராசிக்கு அர்த்தாஷ்டம சனியும் நடந்து வருகிறது. இந்த ராசிக்காரர்கள் தங்கள் ஆரோக்கியம், பணம் மற்றும் குடும்ப விஷயங்களில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வேலையில் இருப்பவர்களுக்குப் பணிச்சுமை அதிகரிக்கலாம் அல்லது மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகள் ஏற்படலாம். இந்த நேரத்தில் புதிய தொழில்களில் முதலீடு செய்வதைத் தவிர்ப்பது உத்தமம். நீங்கள் எவ்வளவுதான் உழைத்தாலும் பலன் கிடைக்கவில்லையே என்று தோன்றும், ஆனால் இது சனி பகவான் உங்களைச் சோதிக்கும் காலம் என்பதை உணர்ந்து நிதானமாகச் செயல்பட வேண்டும்.

சனி பகவானால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க மிக எளிய வழி என்னவென்றால், ஏழைகளுக்கும் ஊனமுற்றோர்களுக்கும் உதவி செய்வதுதான். சனி பகவானுக்குப் பிடித்ததே உழைப்பவர்களையும், கஷ்டப்படுபவர்களையும் மதிக்கக் கூடிய குணம்தான். சனிக்கிழமைகளில் உடல் ஊனமுற்றவர்களுக்கு உங்களால் முடிந்த உணவையோ அல்லது கறுப்பு நிறத் துணிகளையோ தானமாகக் கொடுத்தால் சனியின் தாக்கம் பெருமளவு குறையும். அதேபோல் எறும்புகளுக்கு இனிப்பு கலந்த பச்சரிசி மாவு போடுவது ஒரு மிகப்பெரிய பரிகாரமாகச் சொல்லப்படுகிறது. எறும்புகள் அந்த உணவைச் சாப்பிடும்போது உங்கள் கர்ம வினைகள் கரைந்து போவதாக ஐதீகம். மேலும் காகத்திற்குச் சனிக்கிழமைகளில் எள் கலந்த சாதம் வைப்பது உங்கள் முன்னோர்களின் ஆசியைப் பெற்றுத் தரும், இது சனியின் கோபத்தை மட்டுப்படுத்தும்.

ஆன்மீக ரீதியாகப் பார்த்தால் சனி பகவானை அடக்கக்கூடிய சக்தி அனுமனுக்கும் விநாயகருக்கும் உண்டு. சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்று வெண்ணெய் காப்பு சாற்றி அல்லது வடை மாலை சாற்றி வழிபடுவது உங்கள் கஷ்டங்களைச் சுலபமாக்கும். ராம நாமம் சொல்லும் இடத்தில் சனி பகவான் அண்ட மாட்டார் என்பது ஒரு வரலாறு. அதேபோல் சனிக்கிழமை அன்று அரச மரத்தைச் சுற்றி வந்து விளக்கேற்றுவது மிகச் சிறந்தது. அரச மரத்தில் மகாலட்சுமியும் மகாவிஷ்ணுவும் வாசம் செய்வதால், அங்குச் சனி பகவானால் அதிகப் பாதிப்பை ஏற்படுத்த முடியாது. விளக்கேற்றும் போது நல்லெண்ணெய் ஊற்றி எள் முடிச்சு வைத்து தீபம் ஏற்றினால் உங்கள் தொழிலில் இருக்கும் தடைகள் நீங்கும். கருநீல நிறத் துணிகளை அணிவதும் சனியின் கதிர்வீச்சால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும்.

நம்ம ஊர்ல கிராமத்துல எல்லாம் சொல்லுவாங்க “சனி கொடுத்தால் எவர் தடுப்பார்?” என்று. ஆமாம், சனி பகவான் கஷ்டத்தை மட்டும் கொடுப்பவர் அல்ல, அவர் நினைத்தால் ஒருவனைத் தெருவில் இருந்து கோபுரத்திற்கு உயர்த்தவும் முடியும். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான், அது நேர்மை. சனிக்காலத்தில் பொய் சொல்லுவது, மற்றவர்களை ஏமாற்றுவது அல்லது லஞ்சம் வாங்குவது போன்ற காரியங்களில் ஈடுபட்டால் தண்டனை மிகக் கடுமையாக இருக்கும். யாருடைய பணத்தையும் ஆசைப்பட்டு அபகரிக்காதீர்கள். தொழிலாளிகளுக்குச் சேர வேண்டிய சம்பளத்தைச் சரியாகக் கொடுத்துவிடுங்கள். இந்த நற்குணங்கள் உங்களிடம் இருந்தால் சனி பகவான் உங்களுக்குப் பாதகமான பலன்களைக் கொடுக்காமல், உங்கள் உழைப்பிற்கு ஏற்ற உயர்வைக் கண்டிப்பாகக் கொடுப்பார்.

சனியின் தாக்கத்தில் இருப்பவர்கள் மது மற்றும் மாமிச உணவுகளைச் சனிக்கிழமைகளில் தவிர்ப்பது உங்களை எதிர்மறை ஆற்றலில் இருந்து பாதுகாக்கும். தினமும் ‘கோளறு பதிகம்’ அல்லது ‘சனி கவசம்’ வாசிப்பது உங்கள் மனதை வலிமையாக்கும். பயம் என்பதுதான் சனியின் மிகப்பெரிய ஆயுதம், அந்தப் பயத்தை விட்டுவிட்டுத் தன்னம்பிக்கையோடு செயல்பட்டால் சனிப் பெயர்ச்சி உங்களுக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுக்கும் சிறந்த காலமாக அமையும். எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள், காலம் எப்போதும் ஒரே மாதிரி இருக்காது. இப்போது படும் கஷ்டங்கள் எல்லாம் உங்களை ஒரு வைரமாக மாற்றவே என்பதை நினைவில் கொள்ளுங்கள். நம்பிக்கையோடு இந்த எளிய பரிகாரங்களைச் செய்யுங்கள், சனி பகவானே உங்களுக்குப் பாதுகாப்பாக இருப்பார்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இந்த எண்ணெய்யை பயன்படுத்தினால், கொழுப்பு கல்லீரல் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்..!



நாம் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தும் எண்ணெய்களால் பல நோய்கள் ஏற்படுகின்றன. சமையலுக்கு நல்ல எண்ணெய்களைப் பயன்படுத்தி ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகிறார்கள். ஆனால், நம்மில் பலர் இதை முற்றிலும் புறக்கணிக்கிறோம் என்று சொல்வது தவறாகாது. தரமற்ற சமையல் எண்ணெய்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்களில், கொழுப்பு கல்லீரல் நோயையும் குறிப்பிடலாம்.

கல்லீரலில் அதிகப்படியான கொழுப்பு சேர்வதால் ஏற்படும் இந்த நோய், தற்போது உலகெங்கிலும் உள்ள பெரியவர்களைப் பெரிதும் பாதிக்கும் மிகவும் பொதுவான உடல்நலப் பிரச்சனைகளில் ஒன்றாகும்.

ஆரம்ப நிலைகளில் இது எந்த அறிகுறிகளையும் காட்டாவிட்டாலும், கொழுப்பு கல்லீரல் அழற்சி, கல்லீரல் பாதிப்பு மற்றும் கடுமையான சந்தர்ப்பங்களில், சிரோசிஸ் (கல்லீரலை நிரந்தரமாக சேதப்படுத்தும் ஒரு நிலை) ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.

ஆரோக்கியமான உணவுமுறை இந்த நோய்க்கு ஒரு நல்ல தீர்வாகும்.

இந்த நோயைத் தடுப்பதில் ஆரோக்கியமான உணவுமுறையைப் பின்பற்றுவது முக்கியப் பங்கு வகிக்கிறது. இன்ஸ்டாகிராமில், இரைப்பை குடல் நிபுணர் சௌரப் சேத்தி, எந்த வகையான சமையல் எண்ணெய்கள் கல்லீரலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதைக் குறிப்பிடும் ஒரு பதிவைப் பகிர்ந்துள்ளார். அந்தப் பட்டியலில் சோயாபீன், சோளம், பருத்திவிதை, திராட்சைவிதை மற்றும் கனோலா ஆகியவை அடங்கும். ஆனால் நல்ல செய்தி என்னவென்றால், எல்லா சமையல் எண்ணெய்களும் உட்கொள்வதற்குத் தீங்கானவை அல்ல. உண்மையில், கல்லீரல் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும் எண்ணெய்களின் பட்டியலையும் டாக்டர் சேத்தி பகிர்ந்துள்ளார்.

**எக்ஸ்ட்ரா வெர்ஜின் ஆலிவ் எண்ணெய்**

அதன் அழற்சி எதிர்ப்புப் பண்புகளுக்காக அறியப்படும் எக்ஸ்ட்ரா வெர்ஜின் ஆலிவ் எண்ணெய், கல்லீரல் அழற்சியைக் குறைக்கவும் இன்சுலின் உணர்திறனை மேம்படுத்தவும் உதவுகிறது.

நீங்கள் ஆலிவ் எண்ணெயை சாலட்களில் சேர்க்கலாம், சமைத்த காய்கறிகளின் மீது தூவலாம், அல்லது லேசாகப் பொரிப்பதற்கும் பயன்படுத்தலாம்.

**நல்லெண்ணெய்**

இதில் கல்லீரல் நொதிகளை ஒழுங்குபடுத்தவும், அழற்சியைக் குறைக்கவும் உதவும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் லிக்னான்கள் உள்ளன. இதிலுள்ள மோனோ மற்றும் பாலிஅன்சாச்சுரேட்டட் கொழுப்புகளின் சமநிலை, வளர்சிதை மாற்றத்திற்கு உதவுகிறது.

**ஆளிவிதை எண்ணெய்**

இதில் தாவர அடிப்படையிலான ஒமேகா–3 நிறைந்துள்ளது. இவை கல்லீரல் கொழுப்பு மற்றும் அழற்சியைக் குறைப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இது வெப்பத்தைத் தாங்காது என்பதால், இதை பச்சையாக உட்கொள்வதே சிறந்தது.

இந்த எண்ணெய்கள் அனைத்தையும் பயன்படுத்துவது ஒரு சிறந்த தொடக்கமாகும், ஆனால் உங்கள் கல்லீரல் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு, இவற்றை ஒரு சமச்சீர் உணவு மற்றும் வழக்கமான உடற்பயிற்சியுடன் சேர்த்துக்கொள்ளுங்கள்.

# போதை இளைஞர்களை நல்வழிப்படுத்த வாய் திறக்காத விஜய்: பதறும் பெற்றோரின் பரிதவிக்கும் கேள்வி!!



சென்னை, ஏப். 22–

"உங்களுக்காக பல வலிகளை தாங்கி வந்திருக்கிறேன்....."

''உங்களுக்காகவே உச்சத்தில் இருக்கும்போதே அரசியலுக்கு வந்திருக்கிறேன்....."

''ஒவ்வொரு வீட்டிலும் விஜய் இருப்பான்"...

"அண்ணனாக, தம்பியாக, மகனாக நான் இருப்பேன்...."

இப்படியெல்லாம் அரசியல் மேடைகளில் நீட்டி முழக்கி வீர வசனம் பேசும் விஜய், தன்னை நம்பி. தனது பின்னால் வரும் இளைஞர்களை நல்வழிப்படுத்த இதுவரை ஏதாவது செய்திருக்கிறாரா என்ற கேள்வி பெற்றோர் மத்தியில் பலமாக எழுந்துள்ளது. விஜய் போகும் இடமெல்லாம் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் இளம் பெண்களும் கூடுகிறார்கள்.

அவரைப் பார்த்து வெறித்தனமாக கூச்சலிடுகிறார்கள். பலர் உயிரைப் பணயம் வைத்து பைக்குகளில் விஜய் வாகனத்தை துரத்துகிறார்கள். ''விஜய் தான் எங்களுக்கு எல்லாமே. விஜய்க்கு தான் ஓட்டுப் போடுவோம். விஜய் மட்டுமே மாற்றத்தைத் தருவார் என்றெல்லாம் பரபரப்பாக பேட்டி தருகிறார்கள். பல வீடுகளில் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்காக விஜயை கவனிக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் இந்த இளைஞர்களை நல்வழிப்படுத்த விஜய் இதுவரை என்ன செய்துள்ளார் என்று பல பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஏற்கனவே தமிழக இளைஞர்கள் மத்தியில் கஞ்சா, போதை மருந்து நடமாட்டம் அதிகரித்துள்ளது என்ற பெரும் குற்றச்சாட்டு இருக்கிறது.

தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு பாலியல் குற்றங்கள் அதிகம் நடப்பதற்கு இந்த போதை பழக்கம் முக்கிய காரணமாக இருக்கிறது என்பதும் தெள்ளத் தெளிவாக தெரிகிறது.நடிகர் ரஜினிகாந்த் கூட, சமீப காலமாக சில இடங்களில் பேசும்போது, ''இளைஞர்கள் போதை பழக்கத்துக்கு அடிமையாகக் கூடாது. அப்படி செய்தால் உங்கள் மனமும் உடலும் கெட்டு விடும்" என்று கூறி இளைஞர்களை நல்வழிப்படுத்த முயற்சிக்கிறார்.

நடிகர் அஜித் கூட, "படம் பார்க்கும்போது நடிகர்களை ரசியுங்கள். அதோடு விட்டுவிட்டு, குடும்பத்தை கவனியுங்கள்'' என்று பல முறை பேசியுள்ளார். ஆனால் இந்த விஜய் என்ன செய்கிறார். தனது படங்களில் புகை பிடிக்கிறார், போதையை நன்கு ஏற்றி படுக்கையில் விழுந்து கிடக்கிறார். கேரக்டருக்காக அப்படி நடித்தாலும், அதை தனது ரசிகர்களும் பின்பற்றுவார்களே என அவர் யோசிப்பதில்லை.

சரி, படத்திற்காக வேறு வழியில்லாமல் அப்படி நடிப்பதாகவே வைத்துக்கொள்வோம். அதன் பிறகாவது, ''என் நெஞ்சில் குடிகொண்டு இருக்கும் ரசிகர்களே. நான் செய்வது எல்லாமே சினிமாவுக்காகத் தான். அதை நிஜ வாழ்க்கையில் செய்யாதீர்கள். போதை பக்கமே போகாதீர்கள். குடும்பம் சீரழிந்துவிடும். உங்கள் குடும்பத்தை பாருங்கள். போதை உங்களை அழித்து விடும்" என்று என்றைக்காவது பேசி உள்ளாரா. பணம் சம்பாதிப்பதற்காக எப்படி வேண்டுமானாலும் நடிக்கலாம் என்று தானே நினைக்கிறார். தனது ரசிகர்களும் போதையின் பிடியில் சிக்கி இருந்தால் தான் மூளைக்கு வேலை கொடுக்க மாட்டார்கள். தனது படங்களை தேடித்தேடி பார்ப்பார்கள். நாமும் நிறைய சம்பாதிக்க முடியும் என்றுதானே நினைக்கிறார்.

உண்மையில் மக்கள் நலனுக்காக அரசியலுக்கு வருபவராக இருந்தால், தனது லட்சோபலட்சம் ரசிகர்களுக்கு அவர் அறிவுரை சொல்லி இருக்க வேண்டும் அல்லவா. ஏன் அவர் அதை செய்யவில்லை. அப்படி என்றால் நிஜ வாழ்க்கையிலும் அவர் நடிக்கிறாரா என்ற கேள்விகள் எழுகின்றன.

என்ன செய்யப் போகிறார் விஜய்?

# மதுரை மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கில் தமிழ்!



மதுரை, ஏப். 22–

கரூரைச் சேர்ந்த வழக்கறிஞர் தமிழ் ராஜேந்திரன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தமிழகத்தில் கோயில் குடமுழுக்குகளில் மந்திரங்கள் ஓதும் போத சமஸ்கிருத மந்திரங்களுக்கு இணையாக தமிழ் மந்திரங்களையும் ஓத வேண்டும் என பல்வேறு வழக்குகளில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும் கோயில்களில் குடமுழுக்கின் போது சமஸ்கிருத மந்திரங்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் அனைத்து கோயில்களிலும் குடமுழுக்கில் சமஸ்கிருதத்துக்கு இணையாக தமிழ் மந்திரங்களை பயன்படுத்துவதற்காக குடமுழுக்கு தொடர்பாக அறநிலையத் துறை அமைத்துள்ள உயர்மட்டக் குழுவின் அறிக்கையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் குடமுழுக்கு செப்.17–ல் நடைபெறுகிறது. மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு உட்பட அனைத்து கோயில்களில் குடமுழுக்கின்போது சமஸ்கிருத மந்திரத்துக்கு இணையாக தமிழ் மந்திரங்களையும் பயன்படுத்த உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி பரதசக்கரவர்த்தி இன்று விசாரித்தார். மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்கள் எம்.கே.சுரேஷ், திலககார்த்திகா வாதிட்டனர்.

பின்னர் நீதிபதி, 'மதுரை சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாநகரம். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பொற்றாமரை குளத்தில் தான் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு கூறுகிறது. பொற்றாமரை குளத்துக்கு தமிழ் இருக்கை என்றும் பெயர் உள்ளது. தமிழுக்கு சிறப்பு செய்யும் மதுரையில் மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் மற்ற கோயில்களை விட தமிழ் மந்திரங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும். கோயில் குடமுழுக்கு தொடர்பாக உயர் நீதிமன்றம் ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த உத்தரவு நகல் தமிழிலும் வழங்கப்படும். விசாரணை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்படுகிறது' என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.



# சட்டமன்ற தேர்தல் - 11,323 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

சென்னை, ஏப். 22–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று வாக்களிக்க ஏதுவாக மொத்தம் 11,323 பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது. நெரிசலைத் தவிர்க்க 4 பேருந்து நிலையங்களில் இருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றனர். இது தொடர்பாக போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது: 2026–சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, வரும் ஏப். 21 முதல் ஏப். 23 பிற்பகல் வரை சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், 6,234 சிறப்புப் பேருந்துகள் மூன்று நாட்களுக்கும் சேர்த்து மொத்தமாக, 11,323 பேருந்துகள் இயக்கப்படவுள்ளது.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து, புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் இயக்கப்படும்.


# அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க தேர்தல் வார் ரூம் அமைப்பு!




சென்னை, ஏப். 22–

தி.மு.க. சார்பில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தேர்தல் வார் ரூம் அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல் குறித்த சந்தேகங்கள் மற்றும் புகார்களை தெரிவிக்க 080694 46900 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல்: விமானக் கட்டணம் பல மடங்கு உயர்வு!




சென்னை, ஏப். 22–

ஏப். 23 (நாளை) வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு செல்லும் விமானங்களில் விமானக் கட்டணம் கிடு கிடுவென உயர்ந்துள்ளது. சென்னை – தூத்துக்குடிக்கு சாதாரண நாட்களில் ரூ.5,354 கட்டணமாக உள்ள நிலையில் இன்று ரூ.17,527 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து மதுரைக்கு ரூ.13,320, திருச்சிக்கு ரூ.14,237ஆக விமானக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை – கோவைக்கு சாதாரண நாட்களில் ரூ.3,319 கட்டணமாக உள்ள நிலையில் இன்று ரூ.12,027– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான விமானங்களில் டிக்கெட்டுகள் தீர்ந்ததால் பயணிகள் தவித்து வருகின்றனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# சினிமா துளிகள்..!



## ஜனநாயக கடைமையை நிறைவேற்ற சென்னை திரும்பிய அஜித்!



நடிகரும், ரேசருமான அஜித்குமார் தற்போது சென்னை திரும்பியுள்ள வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அவரது அணி பெல்ஜியத்தில் நடைபெறும் உலகின் சவாலான கார் பந்தயங்களில் ஒன்றான 24H Series–இல் கலந்து கொண்டு இரண்டாவது இடம் பிடித்தது. இதற்கு ரசிகர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.

இதற்கிடையே, தனது ஜனநாயக கடைமையை நிறைவேற்றுவதற்காக நடிகர் அஜித் சென்னை திரும்பி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டாஸ்மாக்: ரூ.400 கோடிக்கு மது விற்பனை!




சென்னை, ஏப். 22–

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு (ஏப்.23) நடைபெறுகிறது. மே 4–ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்நிலையில் மாநிலம் முழுவதும் டாஸ்மாக் மதுக்கடைகள் தேர்தலுக்கு முன்பாக ஏப்.21 முதல் 23–ம் தேதி வரை 3 நாட்களும், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4–ம் தேதியும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தொடர்ந்து 3 நாட்கள் மதுக்கடைகள் மூடப்படுவதால், நேற்று முன்தினமே மதுப்பிரியர்கள் 3 நாட்களுக்கும் சேர்த்து மதுபாட்டிகளை வாங்கிச் சென்றனர். இதனால் நேற்று முன்தினம் மட்டும் ரூ.400 கோடிக்கு மது விற்பனை நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.




# வேலை வாய்ப்பு

## பணியாளர் தேர்வாணைய காலியிடங்கள்!

**SSC Recruitment 2026**

- Vacancy: 3003
- Exam Name: Phase-XIV/2026/Selection Posts
- Qualification: 10th, 12th, Anyb Degree
- Selection Process: CBE, Typing/Data Entry/Computer Proficiency Test

நிறுவனத்தின் பெயர்: பணியாளர் தேர்வு ஆணையம்
அறிவிப்பு எண்: HQ–RHQS015/1/2026/C–4
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 3003 பதினான்காம் கட்டம்/2026/தேர்வுப் பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 13.04.2026
கடைசி தேதி: 04.05.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssc.gov.in/

## ஆர்.பி.ஐ. 11 காலியிடங்கள்!

**RBI Recruitment 2026**

- Vacancy: 11
- Post Name: Junior Engineer (Civil/ Electrical)
- Qualification: Diploma, B.E/B.Tech
- Selection Process: Online Exam, Language Proficiency Test

நிறுவனத்தின் பெயர்: இந்திய ரிசர்வ் வங்கி
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 11 இளநிலை பொறியாளர் (சிவில்/ எலக்ட்ரிக்கல்) பணியிடங்கள்
பணியிட மாற்றம்: இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும்
தொடங்கும் தேதி: 16.04.2026
கடைசி தேதி: 06.05.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://opportunities.rbi.org.in/

## சென்னை சுங்கத்துறை 10 காலியிடங்கள்!

**Customs Chennai Recruitment 2026**

- Vacancy: 10
- Post Name: Tradesman, Seaman, Greaser
- Qualification: 10th, ITI
- Selection Process: Written Test, PET (Swimming)

நிறுவனத்தின் பெயர்: சுங்க ஆணையர் (பொது) அலுவலகம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 10 டிரேட்ஸ்மேன், சீமேன், கிரீசர் பணியிடங்கள்
பணியிட மாற்றம்: சென்னை
தொடங்கும் தேதி: 04.04.2026
கடைசி தேதி: 30.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://chennaicustoms.gov.in/

## சென்ட்ரல் வங்கி 26 காலியிடங்கள்!

**Central Bank of India Recruitment 2026**

- Vacancy: 26
- Post Name: Specialist Officers (SO)
- Qualification: B.E/B.Tech, MBA, CA
- Selection Process: Written Test, Interview

நிறுவனத்தின் பெயர்: சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 26 சிறப்பு அலுவலர் (SO) பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 09.04.2026
கடைசி தேதி: 30.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://centralbank.bank.in/

## IRCTC இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலா கழகம் 84 காலியிடங்கள்!

**IRCTC Recruitment 2026**

- Vacancy: 84
- Post Name: Hospitality Monitors
- Qualification: B.Sc, BBA, MBA
- Selection Process: Walk in Interview

நிறுவனத்தின் பெயர்: ஐஆர்சிடிசி இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலா கழகம்
அறிவிப்பு எண்: 2026/IRCTC/SZ/HRD/RECTT./HOSPITALITY MONITORS
பணி வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்
கால அளவு: 03 ஆண்டுகள்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 84 விருந்தோம்பல் கண்காணிப்பாளர் பணியிடங்கள்
பணியிடங்கள்: தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா
நேர்காணல் தேதி: 25.04.2026, 27.04.2026 மற்றும் 28.04.2026.
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: HTTPS://IRCTC.COM/

## நறுமணப் பொருட்கள் வாரிய காலியிடங்கள்!

**Spices Board Recruitment 2026**

- Post Name: Trainee Analyst
- Qualification: B.Sc
- Salary: Rs.20,000/-
- Selection Process: Walk-in-Test & Interview

நிறுவனத்தின் பெயர்: நறுமணப் பொருட்கள் வாரியம்
அறிவிப்பு எண்: 46/2025
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 02 பயிற்சி ஆய்வாளர் (வேதியியல்), பயிற்சி ஆய்வாளர் (நுண்ணுயிரியல்) பணியிடங்கள்
பணியிட மாற்றம்: சென்னை
நேர்காணல் தேதி: 30.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.indianspices.com/



# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## சட்டமன்ற தேர்தல் 2026: வாக்குச்சாவடிக்குள் என்னென்ன இருக்கும்? எப்படி வாக்களிப்பது? விரிவான வழிகாட்டி?

சென்னை, ஏப். 22–

100% வாக்குப்பதிவை எட்ட வேண்டும் என தேர்தல் ஆணையமும் பல நடவடிக்கைகளை கையில் எடுத்துள்ளது. இந்த தேர்தலில் முடிவை மாற்றி அமைக்கக்கூடியவர்களாக முதல் முறை வாக்காளர்களும் ,இளம் வாக்காளர்களும் இருக்கிறார்கள். தேர்தலில் முதன்முறையாக நான் வாக்களிக்க போகிறேன் என்பவர்கள் வாக்குச்சாவடிக்கு சென்று எப்படி வாக்களிக்க வேண்டும் என்ற குழப்பத்தில் இருப்பார்கள்.அவர்களுக்கான ஒரு விரிவான வழிகாட்டி தான் இது. வாக்குச்சாவடிக்கு செல்வதற்கு முன்னதாக உங்களுடைய பூத் ஸ்லிப் கட்டாயம் கையில் இருக்க வேண்டும், அதோடு வாக்காளர் அடையாள அட்டை அல்லது தேர்தல் ஆணையம் குறிப்பிட்டு இருக்கக்கூடிய 12 முக்கிய அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை கையில் வைத்திருக்க வேண்டும். இந்த இரண்டு ஆவணங்களோடும் நீங்கள் வாக்குச்சாவடிக்கு செல்ல வேண்டும்.




உங்களின் வாக்குச்சாவடி மையத்திற்கு செல்லுங்கள். அங்கே வரிசை இருந்தால் வரிசையில் காத்திருக்க வேண்டும். உங்களின் பகுதிக்கான வாக்குப்பதிவு அறைக்கு செல்ல வேண்டும். வாக்கு மையத்திற்குள் மொபைல் ஃபோன்களை கொண்டு செல்ல அனுமதி இல்லை என்பதால் முன்கூட்டியே உங்களுடைய போனை சுவிட்ச் ஆப் செய்து மொபைல் போனை டெபாசிட் செய்வதற்கான இடத்தில் ஒப்படைத்து விட்டு செல்ல வேண்டும். அவர்கள் அதற்கு ஒரு டோக்கன் தருவார்கள்.

அடுத்ததாக வாக்களிக்கும் அறைக்கு செல்லுங்கள். அங்கே மூன்று அலுவலர்கள் இருப்பார்கள். முதல் அலுவலர் உங்கள் அடையாள அட்டை சோதித்து உங்களின் பாகம் எண் ,வரிசை எண் உள்ளிட்டவற்றை படிப்பார். அதை வேட்பாளர்களின் ஏஜெண்டுகள் சரி பார்ப்பார்கள். இரண்டாவது அலுவலர் உங்களுடைய இடது கை ஆள்காட்டி விரலில் மை வைத்து உங்களுடைய கையெழுத்தையும் பெற்றுக் கொண்டு ஸ்லிப் வழங்குவார். அடுத்ததாக மூன்றாவது அலுவலர் வாக்குப்பதிவு இயந்திரத்தின் கட்டுப்பாட்டாளராக இருப்பார். அவர் அந்த ஸ்லிப்பை வாங்கி பரிசோதித்து ஒரு பட்டனை அழுத்துவார். இதனை அடுத்து நீங்கள் வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு செல்ல வேண்டும். வாக்குப்பதிவு ரகசியம் காக்கப்பட வேண்டும் என்பதால் அது ஒரு மூடப்பட்ட இடமாக இருக்கும். அங்கே சென்று வாக்குப்பதிவு இயந்திரத்தில் உங்களுடைய வாக்கினை நீங்கள் பதிவு செய்ய வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளரின் , பெயர் சின்னம் இருக்கும் அதற்கு நேரடியாக பட்டன்கள் இருக்கும். உங்களுக்கு விருப்பமான வேட்பாளருக்கு நேராக உள்ள பட்டனை நீங்கள் அழுத்த வேண்டும். அப்போது பீப் என்று ஒலிக்கும்.

## பரபரப்பான தேர்தல் திருவிழா: 4 முனை போட்டி: ஏப். 23-ல் வாக்குப்பதிவு!

சென்னை, ஏப். 22–

தமிழக சட்டமன்ற தேர்தல் நாளை (வியாழன்) நடைபெற உள்ளது. இதையடுத்து மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.




தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி நிலவுகிறது. இந்த தேர்தலில் வெற்றி வாகை சூடுவதற்காக ஒவ்வொரு கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டன. தற்போது கோடையின் வெப்பம் அதிகமாக இருந்தாலும், தலைவர்கள்–வேட்பாளர்களின் பிரசாரங்கள் அதனை விட அனல் கக்கியது.

**தலைவர்களின் இறுதிக்கட்ட பிரசாரம்**

இந்த தேர்தலில் தி.மு.க.. மீண்டும் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் களம் இறங்கி உள்ளது. முதல்–அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் கடந்த 31–ந் தேதி திருவாரூரில் தனது பிரசாரத்தை தொடங்கினார். தொடர்ந்து அவர் மாவட்டங்களில் பிரசாரம், பொதுக்கூட்டம், ரோடு ஷோ ஆகியவற்றில் கலந்துகொண்டு தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டியநிலையில்நேற்று தனது பிரசாரத்தை தான் போட்டியிடும் கொளத்தூரில் நிறைவு செய்தார். மயிலாப்பூரில் தனது பிரசாரத்தை தொடங்கிய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சேலத்தில் தனது பிரசாரத்தை நிறைவு செய்தார்.

த.வெ.க. தலைவர் விஜய், தனது வேட்பு மனுவை பெரம்பூரில் தாக்கல் செய்துவிட்டு, அங்கே பிரசாரத்தை தொடங்கி நேற்று சென்னை நந்தனத்தில் நிறைவு செய்தார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரைக்குடியில் தனது பிரசாரத்தை நிறைவு செய்தார்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தர்மபுரியிலும், அ.ம.மு.க. தலைவர் டி.டி.வி.தினகரன் காரைக்குடி தொகுதியிலும், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா தான் போட்டியிடும் விருத்தாசலம் தொகுதியிலும், விடுதலைச்சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் திருக்கோவிலூரிலும் தங்களது இறுதிக்கட்ட பிரசாரத்தை மேற்கொண்டனர். தஞ்சையில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணியும், கும்பகோணத்தில் த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசனும் இறுதி கட்ட பிரசாரத்தை நிறைவு செய்தனர்.

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் 4,023 தகுதியுள்ள வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். அவர்களில் 3,579 பேர் ஆண்கள், 443 பேர் பெண்கள், ஒருவர் மூன்றாம் பாலினத்தவராகும்.

தமிழகத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை தற்போது 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். அவர்களில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவராகும்.

வாக்காளர் பட்டியல் தொடர்பான எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவடைந்த நிலையில், சுமார் 40 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டன. எனவே, ஏற்கனவே வாக்களித்து வருபவர்களே இந்த முறை வாக்களித்தாலும், தமிழகத்தின் வாக்கு சதவீதம் 85–ஐ தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ரூ.1,200 கோடி மதிப்புள்ள பணம், பரிசுப் பொருட்கள் பறிமுதல்**

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை சுதந்திரமாக நடத்த தமிழகத்திற்கு 326 தேர்தல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் அனுப்பி வைத்துள்ளது. அவர்களில் 136 பேர் பொதுப்பார்வையாளர்கள், 40 பேர் போலீஸ் பார்வையாளர்கள், 150 பேர் செலவினப்பார்வையாளர்கள். இந்த தேர்தல் காலகட்டத்தில் பறக்கும் படையினரால் ரூ.1,200 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

300 கம்பெனி துணை ராணுவத்தினரும், 1.20 லட்சம் தமிழக போலீசாரும் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தல் பணிகளுக்காக 3.60 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மொத்தமுள்ள 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில், வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கை உறுதி செய்யும் ‘விவிபாட்’ எந்திரங்கள், கட் டுப்பாட்டு எந்திரம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இந்த எந்திரங்கள் அனைத்தும் இன்று (புதன்கிழமை) காலை முதல் அந்தந்த வாக்குச் சாவடிகளுக்கு கொண்டு செல்லப்பட உள்ளன. இதற்காக தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலகத்தில் இருந்து வாக்குப்பதிவு எந்திரங்கள், விவிபாட், கட்டுப்பாட்டு எந்திரங்கள் பாதுகாப்பாக வாகனங்களில் எடுத்துச்செல்லப்படுகின்றன.

அவை அதற்கான வாக்குச்சாவடிகளில் இன்று நிறுவப்படும். அந்தப் பணியை பெல் நிறுவன பொறியாளர்கள் மேற்கொள்வார்கள். அந்த வகையில் தமிழகத்தின் அனைத்து 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளுக்கும் இன்று இந்த எந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டு நிறுவப்பட்டுவிடும்.

**இறுதிக்கட்ட பயிற்சி**

தேர்தல் பணியாளர்களுக்கு இன்று இறுதிக்கட்ட பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் பயிற்சியை முடித்ததும் தேர்தல் பணிக்கான உத்தரவு வழங்கப்படும். அதை பெற்றுக்கொண்டு அந்தந்த வாக்குச்சாவடிக்கு இன்றே சென்றுவிடுவார்கள். இன்று இரவில் அவர்கள் அங்குதான் தங்க வேண்டும். பெண் பணியாளர்கள் மட்டும் வீட்டுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் வாக்குப்பதிவு தொடங்குவதற்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பே, அதாவது நாளை காலை 5.30 மணிக்கு முன்பே தங்களுக்கான வாக்குச்சாவடிகளுக்கு வந்துவிட வேண்டும்.

**7 மணிக்கு மாதிரி வாக்குப்பதிவு**

நாளை காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணிவரை நடைபெறும். வாக்குப்பதிவு தொடங்க 1 மணி நேரத்திற்கு முன்பதாக மாதிரி வாக்குப்பதிவு நடைபெறும். அப்போது வாக்குச்சாவடி தலைமை அலுவலர், மற்ற 3 அலுவலர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் இருப்பார்கள்.

**சிசிடிவி கண்காணிப்பு**

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கு உள்ளேயும், வெளியேயும் சிசிடிவி வைக்கப்பட்டிருக்கும். அங்கு நடக்கும் வாக்குப்பதிவை நேரடியாக கண்காணிக்க 3 வகை கட்டுப்பாட்டு அறைகளை தேர்தல் கமிஷன் அமைத்துள்ளது. அதன்படி, தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் நடத்தும் அதிகாரி ஆகியோரின் கட்டுப்பாட்டில் வரும் வகையில் அவை அமைக்கப்பட்டுள்ளன. தலைமை தேர்தல் அதிகாரியின் கட்டுப்பாட்டில் வரும் அறை, சென்னை தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10–வது தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறதா..? எப்படி உறுதி செய்வது..?

சென்னை, ஏப். 22–

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து நாளை (வியாழக்கிழமை) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. ஒரே கட்டமாக நடைபெறும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கான போட்டியில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.



**உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா..?**

வாக்காளர் அட்டை உங்களிடம் இருக்கிறதோ இல்லையோ முதலில் நீங்கள் செய்ய வேண்டியது வாக்காளர் பட்டியலில் உங்களது பெயர் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். வாக்காளர் அடையாள அட்டை இல்லை என்றால் voters.ece.gov.in / Voter Helpline App வாக்காளர்கள் தங்கள் புதிய டிஜிட்டல் வாக்காளர் அடையாள அட்டையை பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் இருக்கிறது.

தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் பூத் ஸ்லிப் என்பது உங்கள் வாக்குச் சாவடியைக் கண்டறிய மட்டுமே. அது அடையாள ஆவணமாகக் கருதப்படாது. தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட 12 ஆவணங்களில் ஒன்றை எடுத்துச் செல்ல மறக்காதீர்கள்.

அடையாள அட்டை ஆவணங்கள் என்னென்ன..?

1. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டிருந்தது.

(i) ஆதார் அட்டை

(ii) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை

(iii) புகைப்படத்துடன் கூடிய வங்கி/ அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்

(iv) தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை/ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை

(v) ஓட்டுநர் உரிமம்

(vi) வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card)

(vii) தேசிய மக்கள் தொகை பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை

(viii) இந்திய கடவுச்சீட்டு

(ix) புகைப்படத்துடன் கூடிய ஒய்வூதிய ஆவணம்

(x) மத்திய/மாநில அரசுகள்/பொதுத் துறை நிறுவனங்கள்/ வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

(xi) பாராளுமன்ற/சட்டமன்ற/ சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை

(xii) இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை.

2. வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப்பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும்.

மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப்பதிவு நாளுக்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச்சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

3. ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

4. 1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 20A–இன்கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## சென்னையில் இருந்து 1.88 லட்சம் பேர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊர்களுக்கு பயணம்!

சென்னை, ஏப். 22–

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நாளை நடைபெறுகிறது. இதையொட்டி அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் நேற்று முதல் இயக்கப்பட்டன. சென்னையில் பல்வேறு பகுதியில் தங்கி தொழில் மற்றும் வேலை செய்து வரும் மக்கள் ஓட்டுப்போட சொந்த ஊர்களுக்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





இந்த நிலையில், நேற்றிரவு சென்னையில் இருந்து 1,88,705 பேர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்துள்ளனர். சென்னையில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு நேற்று மட்டும் 3,431 பஸ்கள் இயக்கப்பட்டுள்ளன. இன்று 3,570 சிறப்பு பஸ்களும் நாளை மதியம் ஒரு மணி வரை 600 சிறப்பு பஸ்களும் சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்படுகிறது.

கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் ஆகிய பஸ் நிலையங்களில் இருந்து இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. நாளை சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் சென்னை உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து சொந்த ஊருக்கு மக்கள் படையெடுத்துள்ளனர்.

சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு செல்லும் ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதால் மக்கள் அவதி அடைந்துள்ளனர். சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்ல இரண்டு சிறப்பு ரெயிலும், கோவைக்கு ஒரு சிறப்பு ரெயிலும் இன்று கூடுதலாக இயக்கப்படுகிறது.

## வாக்காளர்கள் கவனத்திற்கு.. உங்கள் வாக்குச் சாவடியை அறிவது எப்படி..?

சென்னை, ஏப். 22–

* நீங்கள் வாக்களிக்க வேண்டிய ஓட்டுச்சாவடி, உங்கள் பாகம் எண், வரிசை எண்ணை https://electoral–search.eci.gov.in, ecinet.eci.gov.in, voters.eci.gov.net என்ற இணைய தளங்கள் மூலம் அறியலாம்.

* ECINET, Votershelpline, Sweetha செல்போன் ஆப் மூலமும் அறிந்து கொள்ள முடியும். இதற்கு உங்கள் வாக்காளர் அடையாள அட்டை எண் அவசியம்.

* அல்லது 1950 என்ற கட்டணமில்லா எண்ணை பயன்படுத்தி தங்களது வாக்குச்சாவடி விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

* வாக்குச்சாவடிக்குள் கேமரா, ஸ்மார்ட் வாட்ச் உள்ளிட்டவற்றை கொண்டு செல்ல அனுமதி இல்லை.

* வாக்குப்பதிவுக்கு செல்லும்போது வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, வங்கி அல்லது தபால் நிலையம் வழங்கியுள்ள போட்டோவுடன் கூடிய கணக்குப்புத்தகம், ஓட்டுனர் உரிமம், பான் கார்டு, பாஸ்போர்ட் உட்பட 12 அடையாள ஆவணங்களில் எதாவது ஒன்றை கட்டாயம் எடுத்துச் செல்லவும்.

**கியூ ஆர் கோடு வசதி**

* வாக்குச் சாவடிக்குள் செல்போன் கொண்டு செல்ல தடை உள்ளது. வாக்குச்சாவடிகளில் இதற்கென தனி அறை ஏற்படுத்தப்பட்டு, செல்போனுக்கு டோக்கன் வழங்கப்படுகிறது. வாக்களித்து முடிந்தபின் டோக்கனை கொடுத்து செல்போனை திரும்பப் பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.




* வாக்குப்பதிவு இயந்திரத்தில் முன்பு வேட்பாளர் போட்டோ, பெயர் அதற்கு எதிரே அவருக்கான சின்னம் இடம் பெற்றிருக்கும். இம்முறை வேட்பாளர் பெயர் அருகே அவரது கலர் போட்டோவும் இடம் பெற்றிருக்கும். * தேர்தல் பணியாற்றும் ஊழியர்கள் வாக்களிக்க தபால் ஓட்டு வசதி உள்ளது. அதேபோல இந்த தேர்தலில் அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் மின்வாரியம், போக்குவரத்துத்துறை, தீயணைப்புத் துறை, ஆம்புலன்ஸ், சுகாதாரம், குடிநீர் வழங்கல் துறைகளை சேர்ந்தவர்களும் தபால் வாக்களித்துள்ளனர்.

* வாக்களிக்க செல்வோருக்கு பூத் ஸ்லிப் என்ற வாக்காளர் தகவல் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதில் கியூ ஆர் கோடு வசதி உள்ளது. இதை பயன்படுத்தி தங்கள் வாக்கு ச்சாவடி, பாகம் எண், வரிசை எண் போன்றவற்றையும் அறிந்து கொள்ள முடியும்.

* பூத் சிலிப் பெறாதவர்கள் பாகம் எண், வரிசை எண்ணை இணையதளங்கள் மூலம் அறிந்து கொண்டு, ஒரு பேப்பரில் எழுதி வைத்துக்கொண்டு வாக்குச்சாவடிக்கு செல்லலாம்.

## ராமதாஸ் பெயர், புகைப்படங்களை பயன்படுத்த அன்புமணி தரப்புக்குத் தடை!

சென்னை, ஏப். 22–

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் சென்னை 13வது உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள புதிய வழக்கில், அன்புமணி ராமதாஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர் என்றும் தனக்கும் அன்புமணி ராமதாஸுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் பாமக தலைவராக சட்ட விரோதமாக அன்புமணி ராமதாஸ் நீடித்துவருவதாக தெரிவித்துள்ளார்.

சட்டசபை தேர்தலில் தனது புகழை பயன்படுத்துவதா கவும், தன் புகைப்ப டங்களை பயன்படுத்து வதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தில் தன்னுடைய புகைப்படத்தை அன்புமணி தரப்பு வேட்பாளர்கள் 18 பேரும் பயன்படுத்தக்கூடாது என தடை விதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார்.



இந்த வழக்கு நீதிபதி தர்மபிரபு முன்பு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது இதுகுறித்து அன்புமணி தரப்பு 18 பாமக வேட்பாளர்களுக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. இரு தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி தர்மபிரபு, அன்புமணி ராமதாஸ் தரப்பினர், பாமக நிறுவனர் ராமதாஸ் படங்களை பயன்படுத்த தடை விதித்து உத்தரவிட்டு உள்ளார். இந்த உத்தரவு வரும் காலத்திற்கும் பொருந்தும் என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டு, வழக்கின் அடுத்தகட்ட விசாரணை ஜூன் 4ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020